**கவனிக்க.**- *2006.11.03 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1471 - 2006 නොවැම්බර් 10 වැනි සිකුරාදා - 2006.11.10

*1471 ஆம் இலக்கம் - 2006 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1067 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |


**கவனிக்க.**- (i) பிரித்தானியர் கல்வி பிரதிநிதிகளின் சங்கம், இலங்கை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2006 ஒற்றோபர் 13 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) இலங்கை மின்சாரம் சட்டமூலம் 2006 ஒற்றோபர் 16 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான*

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள்* ***வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.*** *வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.*

*வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்*** *இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2006, நவெம்பர் 17 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2006, நவெம்பர் 03 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்த்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2006 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக் குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரசகரும மொழித்தேர்ச்சிச் சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்கு விதிகள், தாபனக் கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம். அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3 : 1 : 1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்தி வைக்கலாம்.

3 : 1 : 2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3 : 1 : 3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3 : 1 : 4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடை நிறுத்தப்படும். அந்த இடை நிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் சித்தி எய்தும் வரையில் அல்லது 3:1:6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3 : 1 : 5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3 : 1 : 6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3 : 1 : 7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3 : 1 : 8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்த்து) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமரத்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவு தொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவு தொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்தி நிதியத்துக்குத் தனது உதவு தொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின் கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளன் கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்த போதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின் கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவயாற்றிவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாது காப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழு நேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரச சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்த மட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டு பிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பதவிகள் - வெற்றிடம்

இல. : டிஐஆர்எவ்/ஆர்ஈசிரி/239/ஏவை.

## இலங்கை தரைப்படை

பயிலிளவல் உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள்

இலங்கைத் தரைப்படையில் பயிலிளவல் உத்தியோகத்தர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் இலங்கையில் பயிற்றப்படுவர்

2. பயிற்சிக் காலவரையை திருப்திகரமாக பூர்த்தி செய்ததன் பின்னர் பயிலிளவல் உத்தியோகத்தர்கள் இரண்டாம் லெப்டினன்ட் பதவிவரிசையில் அதிகாரவாணையில் நியமிக்கப்படுவர்.

3. **தகுதி:**- விண்ணப்பதாரிகள்-

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) 2006, திசெம்பர் மாதம் 15 ஆந் திகதியன்று 18 வயதுக்கும் 22 வயதுக்கும் உட்பட்டவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

(இ) க.பொ.த (உ/த) (புதிய பாடத்திட்டப்) பரீட்சையில் ஒரே அமர்வில் இரண்டு பாடங்களில் சித்தி பெற்றும், இரண்டமர்வுக்கு மேற்படாமல் க.பொ.த (சா/த) பரீட்சையில் சிங்களம்/தமிழ், கணிதம் ஆகிய பாடங்கள் உட்பட திறமைச் சித்தி நான்குடன் 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தலும் வேண்டும்.

(ஈ) விண்ணப்பதாரர்கள் விவாகமாகாதவர்களாய் இருத்தல் வேண்டும். பயிற்சிக் காலத்தில் பயிலிளவல் உத்தியோகத்தர்களுக்கு விவாகம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

(உ) விண்ணப்பதாரிகள் தேவையான மருத்துவ நியமனங்களைக் கொண்டிருத்தல் வேண்டும். இறுதி நேர்முகப் பரீட்சைக்கு தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் அந்நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு முன்னர் இலங்கைத் தரைப்படை ஒழுங்குகளின் கீழ் நடாத்தப்படும் மருத்துவ பரிசோதனைக்கு உட்புகுத்தப்படுவர்.

(ஊ) தேசிய மட்டடத்தில் அல்லது தேசிய பாடசாலை மட்டத்தில் மிகவும் உயர்ந்த வெற்றிக் கிண்ணங்களை பெற்ற க.பொ.த (சா/த) பரீட்சையில் சித்தி பெற்றவர்கள் சம்பந்தமாக விசேட கவனம் செலுத்தப்படும்.

4. **சேவை நிபந்தனைகள்.**- (அ) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் பயிலிளவல் அதிகாரிகளாக சேர்த்துக் கொள்ளப்படுவதுடன் நிரந்தர சேவையில் 10 வருடங்களுக்கு சேர்த்துக் கொள்ளப்படுவர்.

(ஆ) பயிற்சிக் காலத்தில் பயிலிளவல் அதிகாரி ஒருவரின் வருடாந்த சம்பளம் தரைப்படைச் சம்பளத் தொகுப்பிற்கிணங்க ரூபா 1,77,000 ஆகும். போக்குவரத்து, சீருடை, மருத்துவ, உணவு, தங்குமிடவசதி இலவசமாக வழங்கப்படும். பயிலிளவல் அதிகாரியாக சேவை செய்யும் காலவரையில் அவருக்கு எவ்விதமான சம்பளயுயர்வுகளுக்கும் வாய்ப்பு இல்லை.

(இ) தரைப்படைத் தளபதியினால் நிர்ணயிக்கப்பட்டவாறான ஒரு பயிற்சி நெறியை பயிலிளவல் அதிகாரிகள் பின்பற்ற வேண்டும். பயிற்சிக்காலம் 24 மாதங்கள் வரையிலாகும்.

(ஈ) பயிற்சிக் காலத்தில் பயிலிளவல் அலுவலர்களின் தரம் பிறவரிசைப் பதவியினரது தரத்துக்கு சமமானதாகவும் அவர்கள் தரைப்படை சட்டங்களுக்கு உட்படுத்தப்பட்டவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

(உ) (1) பயிற்சிக் காலத்தில் பயிலிளவல் அதிகாரியொருவர் தம் விருப்பத்தின் பேரில் ஆணைபெறும் அபேட்சகர் நிலையிலிருந்து விலகினால் அப பயிலிளவல் அதிகாரிக்கு பயிற்சிக் காலத்தில் செலவிடப்பட்ட எல்லாவித செலவுகளையும் பெற்றோர் அல்லது பாதுகாவலர் இலங்கை அரசாங்கத்துக்கு மீளச் செலுத்தல் வேண்டும்.

(2) பயிலிளவல் அதிகாரியொருவர் பயிற்சி நெறியில் ஈடுபட்டிருக்கும் காலத்தில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் துர்நடத்தை காரணமாகவோ அல்லது தமது கட்டுப்பாட்டுக்குட்பட்ட காரணங்களினாலோ ஆணை பெறுவதற்கு தகுதியற்றவர் என உயர் அதிகாரிகளினால் சிபாரிசு செய்யப்பட்டால் அவ்வுத்தியோகத்தர் பேரில் ஏற்பட்ட எல்லாச் செலவுகளையும் பெற்றோர் அல்லது பாதுகாவலர் இலங்கை அரசாங்கத்துக்கு மீளச் செலுத்தல் வேண்டும்.

(ஊ) ஆணைபெறும் உத்தியோகத்தர்களாக நியமனம் பெறும்போது பயிலிளவல் உத்தியோகத்தராக நிரந்தரப்படையில் உட்புகுத்தப்பட்டு கட்டுப்பாடுகளிலிருந்து அவர் விடுவிக்கப்படுவர்.

(எ) உத்தியோகத்தர்களக ஆணைபெற்ற பின்னர் ஆகக் குறைந்தது 10 வருடங்களாவது தரைப்படையில் சேவை செய்ய வேண்டும்.

(ஏ) இலங்கைத் தரைப்படையில் இரண்டாம் லெப்டினன்ட் என்ற ஆரம்ப பதவி வரிசையில் ஆணைபெறும் உத்தியோகத்தர்களாக நியமிக்கப்படும்போது அவர்களுக்கு இலங்கைத் தரைப்படையின் உத்தியோகத்தர்களுக்கான ஏற்புடைய பின்வரும் சம்பள அளவுத் திட்டத்தில் வைக்கப்படுவர். (2006/6 அரசாங்க நிரவாக சுற்றுநிரூபம் பிரகாரம் 2007.01.01 செயற்படுத்தும் வகையில்)

| | |
|---|---|
| இரண்டாம் லெப்டினன்ட் | - ரூபா 1,98,960 ஆண்டொன்றுக்கு, 16,580 ரூபா மாதமொன்றுக்கு |
| லெப்டினன்ட் | - ரூபா 2,75,220-30 X 7,740 - ரூபா 5,07, 420 வருடமொன்றுக்கு ; ரூபா 22,935-30 X 645 - ரூபா 42,285 மாதமொன்றுக்கு |
| கப்ரின் | - ரூபா 3,21,660-24 X 7,740 - ரூபா 5,07, 420 வருடமொன்றுக்கு ; ரூபா 26,805-24 X - 645 - ரூபா 42,285 மாதமொன்றுக்கு |
| மேஜர் | - ரூபா 3,52,620-20 X 7,740 - ரூபா 5,07, 420 வருடமொன்றுக்கு ; ரூபா 28,385-20 X 645 - ரூபா 42,285 மாதமொன்றுக்கு |
| லெப்டினன்ட் கர்னல் | - ரூபா 3,62,100-15 X 9,480 - ரூபா 5,04,300 வருடமொன்றுக்கு ; ரூபா 30,175-15 X 790 - ரூபா 43,025 மாதமொன்றுக்கு |
| கர்னல் | - ரூபா 4.41,060-14 X 12,600 - ரூபா 6,42,660 வருடமொன்றுக்கு ; ரூபா 38,855-14 X 1,050 - ரூபா 53,555 மாதமொன்றுக்கு |
| பிரிகேடியர் | - ரூபா 4.66,260-14 X 12,500 - ரூபா 6,42,660 வருடமொன்றுக்கு; ரூபா 38,855-14 X 1,050 - ரூபா 53,555 மாதமொன்றுக்கு |
| மேஜர் ஜெனரல் | - ரூபா 5,08,680-14 X 15,720 - ரூபா 6,97,320 வருடமொன்றுக்கு ; ரூபா 42,390-12 X 1,310 - ரூபா 58.110 மாதமொன்றுக்கு |

(ஐ) சம்பள வாய்ப்பு சேவை நிபந்தனை சம்பந்தமாக பின்வரும் ஒழுங்கு விதிகள் உத்தியோகத்தர்களுக்கு நடைமுறைப் படுத்தப்படும்:-

(1) தரைப்படைச் சம்பளத் தொகுப்பு
(2) 1993, ஒகத்து மாதம் 17 ஆந் திகதிய இலக்கம் 780/07 உடைய இலங்கை அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறான 1992 ஆம் ஆண்டின் உத்தியோகத்தர்களுக்கான ஒழுங்கு விதிகள்.
(3) 1981 ஆம் ஆண்டின் தரைப்படை ஓய்வூதிய பணிக்கொடை கோவை.

5. கீழே 6 ஆம் பந்தியில் குறிப்பிட்டபடி பெற்றோர் அல்லது பாதுகாவலர் பிரகடனப்பத்திரம் ஒன்றுக்கு கையொப்பமிடுவதுடன் அவற்றை விண்ணப்பப்படிவத்தடன் சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பதாரியின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் அவ்விண்ணப்பதாரர் நியமனம் பெறுவதற்கு முன்னர் பிரகடனப்பத்திரத்தில் அடங்கிய நிபந்தனைகளுக்குட்பட்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுடன் ஒப்பந்தமுறி ஒன்றுக்கு கையொப்பமிட வேண்டும்.

**6. விண்ணப்பதாரியின் தாய், தந்தை அல்லது பாதுகாவலரினால் கையொப்பமிட வேண்டிய பிரகடனம் :**

(அ) இலங்கைத் தரைப்படையில் பயிலிளவல் உததியோகத்தர் விண்ணப்பதாரியான....................................................என்பவரின் தந்தை/தாய்/பாதுகாவலர் நானேயாவேன்.

(ஆ) இலங்கையில் பயிற்சி நெறியை பின்பற்ற மேற்குறிப்பிடட விண்ணப்பதாரி தெரிவு செய்யப்பட்டால் பின்வரும் நிபந்தனைகளை நான் பொறுப்பேற்பேன்.

(1) பயிற்சிக் காலவரையில் விண்ணப்பதாரிகளுக்கு ஏற்படும் எல்லாவிதமான சொந்த செலவுகளுக்கும் ;
(2) பயிற்சிக் காலத்தில் மேற்குறிப்பிட்ட விண்ணப்பதாரர் தன் சுய விருப்பத்தின் பேரில் ஆணைபெறும் தம் விண்ணப்பதாரர் நிலையிலிருந்தும் விலகினால் அவர் பேரில் செலவிடப்பட்ட எல்லாவிதமான செலவுகளையும் இலங்கை அரசாங்கத்துக்கு மீளச் செலுத்துவதற்கும் ;
(3) பயிற்சிக் காலத்தில் மேற்பெயர் குறிப்பிட்ட விண்ணப்பதாரர் எச்சந்தர்ப்பத்திலும் (துர்நடத்தை காரணமாகவோ அல்லது தம் கட்டுப்பாட்டுக்குட்பட்ட காரணங்களால்) ஆணைபெறும் தகுதியற்றவர் என மேல் அதிகாரிகளினால் புகார் செய்யப்பட்டால் இலங்கை குடியரசினால் அவருக்காக செலவிடப்பட்ட எல்லாவித செலவுகளையும் மீளச் செலுத்தல் வேண்டும்.

* தேவையற்ற வசனங்களைக் கீறிவிடுக.

......................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி..............................

சாட்சியின் பெயர், முகவரி (தெளிவான எழுத்துக்களில் :...............................................

........................................................
சாட்சியாளரின் கையொப்பம்.

திகதி......................................

சாட்சியின் பெயர், முகவரி (தெளிவான எழுத்துக்களில் :...............................................

........................................................
சாட்சியாளரின் கையொப்பம்.

திகதி......................................

7. **மொழி தொடர்பான விதிகள்**.- அரசாங்க மொழிக் கொள்கையை செயற்படுத்துவதற்கென அரசாங்க மொழி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் ஏற்கனவே செய்யப்பட்ட விதிகளுக்கும் அல்லது இனிமேல் செய்யப்படும் விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

8. **அடையாள அட்டை**.- விண்ணப்பதாரர்கள் தங்களை அறிமுகம் செய்வதற்கு தகுந்த அத்தாட்சிப்பத்திரங்களை வைத்திருத்தல் வேண்டும். ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அடையாள அட்டை, தபாற் தலைமை அதிபதியினால் வழங்கப்பட்ட அடையாள அட்டை அல்லது மோட்டார் போக்குவரத்து அதிகாரியினால் வழங்கப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரம் அல்லது கடவுச்சீட்டு இதற்காக ஏற்றுக்கொள்ளப்படும்.

9. ஏற்கனவே அரசாங்க சேவையில் இருக்கும் விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் தம் திணைக்களத் தலைமையகத்தினூடாக சமர்ப்பித்தல் வேண்டும். இவ்விண்ணப்பக்காரர்கள் தெரிவு செய்யப்பட்டால் அவர்கள் சேவையிலிருந்தும் விடுவிக்கப்படுவார்கள் என்ற சான்றிதழ் ஒன்று சேர்த்து அனுப்பப்படல் வேண்டும்.

10. விண்ணப்பங்கள் கீழ்க் குறிப்பிட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தைப் போன்று அவர்களின் சொந்த கையெழுத்தில் தயாரிக்கப்பட்டு 2006, நவெம்பர் மாதம் 20 ஆந் திகதி ந. ப. 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நிருவாகப் பணிப்பாளர். தரைப்படைத் தலைமையகம், த. பெ. 553, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பம் அடங்கிய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "தரைப்படையில் பயிலிளவல் உத்தியோகத்தர் நியமனங்களுக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடல் வேண்டும். முடிவுத் திகதிக்கு நேரத்துக்கும் பின் தரைப்படை தலைமையகத்துக்கு கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பப்பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது.

11. விண்ணப்பத்துடன் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்தனுப்புதல் வேண்டும் :-

(அ) பிறப்புச் சான்றிதழ்

(ஆ) அடையாள அட்டை

(இ) கிராம சேவை உத்தியோகத்தரரின் சான்றிதழ்

(ஈ) கல்வித் தகைமைச் சான்றிதழ்

(உ) விண்ணப்பதாரரை நன்கறிந்த பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளினால் வழங்கப்பட்ட குறைந்தபட்சம் இரண்டு குணச்சான்றிதழ்கள், இவற்றில் ஒன்று கடைசியாக கல்வி பயின்ற பாடசாலை அதிபரினால் வழங்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

12. மேற்குறிப்பிட்ட தேவைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்களிலிருந்தும் ஆரம்பத் தெரிவு நடைபெறம். அப்படி தெரிந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் தரைப்படை முனைஞனால் நிர்ணயிக்கப்பட்ட பரீட்சைகளுக்கு தோற்ற வேண்டியவராவார்கள். பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்படும் தேர்வுக்குழு முன்னிலையில் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்களை நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுவிப்பதன் மூலம் இறுதித் தெரிவு நடைபெறும்.

13. தேர்வுச் சபைகளினால் நேர்முகப் பரீட்சைக்கு தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சைகளின் இடம், திகதி என்பன எழுத்து மூலம் அறிவிக்கப்படும். நேர்முகப் பரீட்சைகள் கொழும்பில் நடாத்தப்படும். இது தொடர்பில் ஏற்படும் பிரயாணச் செலவுகளோ அல்லது பிற செலவுகளோ இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட மாட்டாது.

14. விண்ணப்பதாரியொருவரை விதந்துரைக்க விரும்பும் எவரும் அவருக்கு நற்சான்றிதழ்களை வழங்குவதன் மூலம் அவ்விதம் செய்யலாம். அவிண்ணப்பதாரியொருவரின் தெரிவில் எவ்விதமான ஆதரவு தேடுதல் அல்லது செல்வாக்கைப் பிரயோகித்தல் அத்தகைய விண்ணப்பதாரியைத் தகுதியிழக்கச் செய்யும்.

15. ஆள் திரட்டலுக்கு தகுதியற்ற விண்ணப்பதாரர்களுக்கு இது சம்பந்தமாக அறிவிக்கப்பட மாட்டாது. இவ்விண்ணப்பதாரர் களிடமிருந்து இவை சம்பந்தான விசாரணைகள் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

ஜிஎஸ்சி பொன்சேகா
ஆர்டப்பி ஆர்எஸ்பி ஆர்சிடீஎஸ் பிஎஸ்சி
லெப்டினன்ட் ஜெனரல்,
தரைப்படைத் தளபதி.

தரைப்படைத் தலைமையகம்,
த. பெ. 553,
கொழும்பு,
2006.10.18

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைத் தரைப்படை**

பயிலிளவல் உத்தியோகத்தர்களுக்கான விண்ணப்பம்

1. (அ) முதற் பெயர் (தெளிவான எழுத்துக்களில்) :-----.
   (ஆ) பிற பெயர்கள் :-----.
   (இ) முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.

2. முகவரி :-----.
   (ஆ) தொலைபேசி இலக்கம் :- (i) அலுவலகம் :-----.
   (ii) வீடு :-----.
   (iii) கையடக்க தொலைபேசி :-----.
   (இ) தேர்தல் மாவட்டம் :-----.
   (ஈ) கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவு :-----.
   (உ) மின் அஞ்சல் (இருப்பின்) முகவரி :-----.

3. தேசிய இனம் (பரம்பரை இலங்கைப் பிரசையா அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரசையா என்பதைக் குறிப்பிடவும் :-----.

   பதிவு மூலம் இலங்கைப் பிரசையாயின் சான்றிதழின் இலக்கத்தையும் திகதியையும் குறிப்பிடவும் :-----.

4. (அ) பிறந்த திகதி (பிறப்புச் சான்றிதழின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்). சமய தீட்சை சான்றிதழ் அல்லத கல்விப் பிரமாண தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது :-----.
   (ஆ) 2006.12.15 ஆந் திகதியன்று வயது :-
   வருடங்கள் :----- மாதங்கள் :----- நாட்கள் :-----.

   (இ) உயரம் :-----.

5. அருகாமையில் உள்ள பொலிஸ் நிலையம் :-----.

6. தந்தையின் பெயரும் பிறப்பின்போது தேசிய இனமும் :-----.
   (குடியுரிமை வழங்கப்பட்டவரானால் சான்றிதழின் இலக்கமும் திகதியும் குறிப்பிடல் வேண்டும்)

7. தாயின் பெயரும் பிறப்பின்போது தேசிய இனமும் :-----.

8. நீர் பயின்ற பாடசாலையின் பின்வரும் விபரங்களைக் குறிப்பிடவும் :-

| பாடசாலையின் பெயர் | சேர்ந்த திகதி | விலகிய திகதி | கடைசியாக தோன்றிய பொதுப் பரீட்சைகள் |
|---|---|---|---|
| | | | |

9. கல்வித் தகைமைகள் (ஒவ்வொரு பரீட்சைகளையும் வெவ்வேறாக குறிப்பிடவும்) :-

| பரீட்சையும் அதன் இலக்கமும் | வருடம் | சித்தி பெற்ற பாடங்கள் | பெறுபேற்றுத் தரம் |
|---|---|---|---|
| | | | |

10. பாடசாலையில் நீர் பெற்ற மேன்மையான விளையாட்டுச் சிறப்புகள் :-----.

11. பாடசாலையின் உமக்கு புகழ் தேடிக்கொடுத்த ஏனைய அரும் பெரும் செயல்கள் :-----.

12. இலங்கைத் தரைப்படை - தொண்டர் படை, இலங்கை சாரணப் படை, தேசிய பயிலிளவற் சிறப்பணி ஆகிய தொண்டர் நிறுவனங்களில் சேவை செய்திருப்பின் அவற்றின் விபரம் :-----.

13. இதற்கு முன்னர் படைக்கலந் தாங்கிய படைத்துறைகள் சேவைக்கு விண்ணப்பம் செய்திருப்பின் அவற்றின் விபரம் :-----.

14. பாடசாலையை விட்டு விலகிய பின்னர் செய்த தொழில் :-----.

15. ஒரு அரசாங்கத் திணைக்களத்தில் அல்லது அரசாங்கதுறை / சபை/ கூட்டுத்தாபனம் (மத்திய வங்கி, தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள், வர்த்தக வங்கிகள், பல்கலைக்கழகங்கள், அரசாங்கத்தினால் மட்டுப்படுத்தப்பட்ட கூட்டுப்பங்குத் தொகுதி கம்பனிகள் உட்பட) பணிக்கமர்த்தப்பட்டிருப்பின் அவற்றிலிருந்து விலக்கப்பட்ட காணரம் :-----.

16. நற்சான்றிதழ்களை வழங்கியவர்களின் பெயரும் முகவரியும் தொலைபேசி இலக்கமும் :-
(அ) ............................
(ஆ) ..........................

17. வேறு பொருத்தமான விடயங்கள் :-----.

18. மேலே தரப்பட்ட வினாக்களுக்கு என்னால் கொடுக்கப்பட்ட விடைகள் அனைத்தும் எனது நம்பிக்கைக்கும் அறிவுக்கும் எட்டியவரை சரியானவை என்று உறுதிமொழிகின்றேன். தரைப்படைப் பயிற்சிக்கான எல்லாச் சேவை நிபந்தனைகளையும் வாசித்து அறிந்து கொண்டேன். அத்துடன் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இவ்வுத்தியோகத்தர்களுக்கான சம்பளம் வாய்ப்புகள், சேவை நிபந்தனைகள் அனைத்தையும் அறிந்து கொண்டேன்.

................................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :...............................

11-201

---

## இலங்கை தொண்டர் விமானப்படை

வான்படை வீரர்/வீராங்கனைகளுக்கான வெற்றிடங்கள்

இலங்கைத் தொண்டர் வான் படையில் கீழே தரப்பட்டுள்ள தொழில் துறைகளில் வான்படை வீரர்/வீராங்கனைகளுக்கான வெற்றிடங்கள் கோரப்பட்டுள்ளன.

1. (அ) **தொழில்துறையும் தேவைப்படும் கல்வித் தகைமைகளும் :**

(1) படவரைஞர் (இயந்திரவியல்).- அரச தொழினுட்ப கல்லூரியில் அல்லது அரசு ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றில் ஒரு (01) வருட காலம் முழுநேர படவரைஞர் தொழிற்பயிற்சியை திறம்பட முடித்திருத்தலுடன் அதே துறையில் ஐந்து (05) வருட கால அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். அளவையியல், கணனி வழிவரைதல் (Auto CAD) சம்பந்தமான அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

தேர்வு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் அவர்களது தகைமைகள் அனுபவத்தைப் பொறுத்து கோப்ரல் அல்லது அதற்கு மேலான நிலைகளில் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

(2) படவரைஞர் (சிவில்).- அரச தொழினுட்ப கல்லூரியில் அல்லது அரசு ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றில் ஒரு (01) வருட காலம் முழுநேர படவரைஞர் தொழிற்பயிற்சியை திறம்பட முடித்திருத்தலுடன் அதே துறையில் ஐந்து (05) வருட கால அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். அளவையியல் சம்பந்தமான அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

தேர்வு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் அவர்களது தகைமைகள் அனுபவத்தைப் பொறுத்து கோப்ரல் அல்லது அதற்கு மேலான நிலைகளில் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

(ஆ) ***ஏனைய தகைமைகள்.***- இலங்கை தொண்டர் வான்படையில் இணைவதற்கு பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :

(1) *தேசிய இனம்.*- ஒரு இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(2) *வயது.*- 2006, திசெம்பர் 31 ஆந் திகதியன்று 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(3) *உயரம்.*- ஆண் 5' 4" உம் அதற்கு மேலும் பெண் 5' 2" உம் அதற்கு மேலும்.

(4) *உடல் நிறை.*- உடற்திணிவு (BMI) - $\frac{\text{நிறை (கி.கி.)}}{\text{உயரம் (மீ)}^2} < 25$

(5) குடியியல் நிலை.- விவாகமான/ விவாகமாகாத இரு பிரிவினரும் விண்ணப்பிக்க முடியும். விவாகமாகாத விண்ணப்பதாரிகள் வான் படையில் அடிப்படைப் பயிற்சி பூர்த்தியடையும் வரை விவாகம் செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள். விவாகமான விண்ணப்பதாரிகள் வான் படையில் அடிப்படைப் பயிற்சி பூர்த்தியடையும் வரை முகாமிற்கு வெளியில் வசிக்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.

2. பந்தி 1 "அ" இல் தேவைப்படும் கல்வித் தகைமைகள் கொண்டிராதவர்களும் பந்தி 1 "ஆ" இல் தேவைப்பாடுகளை நிறைவுசெய்யாதவர்களுமான விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். முதலாவது நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளித்தவுடன் வயது, உயரம், கண் பார்வை பரீட்சிக்கப்படும். வர்த்தமானியில் குறித்துரைக்கப்பட்ட வயது, உயரம், கல்வித் தகைமைகளைக் கொண்டிராத விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படமாட்டார்கள்.

3. விளையாட்டுத் துறையில் சிறந்த சாதனைகள் இருப்பின் முறையாகக் கவனத்திற்கொள்ளப்படும்.

4. **சேவை நிபந்தனைகள்.**- (அ) வான்படைவீரர்/வீராங்கனைகள் சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட தேதியிலிருந்து வான்படை சட்டத்திற்கும் ஏனைய வான்படை ஒழுங்கு விதிகளுக்கும் வேறு கட்டளைகளுக்கும் உட்பட்டவர்களாவர்.

(ஆ) தெரிவுசெய்யப்படும் வான்படை வீரர்/வீராங்கனைகளுக்கு அடிப்படைப் பயிற்சி வழங்கப்பட்டு, அவர்கள் இலங்கையின் எந்தப் பிரதேசத்திலும், மிகக் கஷ்டமான நிலைமையிலும் இரவுபகலாக தமது தாய்நாட்டுக்குள் அல்லது வெளிநாடுகளில் சேவையாற்ற ஆயத்தமாதல் வேண்டும்.

5. **தொழிலில் அமர்த்தப்படுத்தல் பற்றிய நிபந்தனைகள்.**- தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் தொண்டர் வான்படையில் அவர்களது தகைமைகள் அனுபவத்தைப் பொறுத்து கோப்ரல் அல்லது அதற்கு மேலான நிலைகளில் சேர்த்துக்கொள்ளப்பட்டு தொடர்ச்சியாக 5 ஆண்டுகள் சேவையாற்றுதல் வேண்டும். இது தொடர்பான உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொள்ளுமாறு கேட்கப்படுவார்கள். 5 ஆண்டுகள் கழிந்தபின் மீண்டும் சேவையில் சேர்த்துக்கொள்ளப்படும் பொருட்டு பொருத்தமானவர்களுக்கு சந்தர்ப்பங்கள் உண்டு.

6. **சம்பளமும் கொடுப்பனவுகளும் :**

(அ) ***சம்பள விகிதங்கள்.***- ஒரு வருடத்திற்கு வான்படை வான்படை வீரர்/வீராங்கனைகளுக்கு ஏற்புடையதாக திரட்டப்பட்டுள்ள சம்பள விகிதங்கள் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| *கோப்ரல்* | - ரூபா 1,75,200 - 1 x 1,440 - 13 x 1,800 | - ரூபா 2,00,040. |
| *சார்ஜன்ட்* | - ரூபா 1,78,440 - 10 x 1,800 - 2 x 2,520 - 1 x 3,480 | - ரூபா 2,04,960. |
| *பிளைட் சார்ஜன்ட்* | - ரூபா 1,82,040 - 8 x 1,800 - 2 x 2,520 - 3 x 3,480 | - ரூபா 2,11,920. |
| *அதிகாரம் பெற்ற அலுவலர்* | - ரூபா 1,89,240 - 4 x 1,800 - 2 x 2,520 - 9 x 3,480 | - ரூபா 2,32,800. |

மேற்குறிப்பிட்ட சம்பள திரட்டு விகிதங்களுக்கு ஏற்புடையதாக சம்பள கொடுப்பனவுகள் வழங்கப்படும். சேவை காலத்தில் அவரவர் நன்னடத்தை, சேவை ஆற்றல் ஆகியவற்றிற்கிணங்க உயர் நிலைகள் கிடைக்கப்பெறுவதுடன் அதற்கிணங்க சம்பள விகிதங்களும் திருத்தப்படும்.

(ஆ) ***வேறு கொடுப்பனவுகள் :***

(1) வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு ரூபா 1,375.

(2) கடினப்படி - மாதமொன்றுக்கு ரூபா 600.

(3) கஷ்டப்பிரதேசங்களில் சேவை புரிபவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூபா 1,900.

(4) விஷேட கடினப்படி - விசேட கொடுப்பனவு யாழ் குடாநாட்டில் சேவையாற்றுபவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூபா 2,400 வழங்கப்படும்.

(5) உணவுக் கொடுப்பனவு - வெளியில் தங்கும் வான்படை வீரர்/வீராங்கனைக்கு மாதமொன்றுக்கு ரூபா 5,649.75 உள்ளேதங்கும் வான்படை வீரர்/வீராங்கனைக்கு இலவச உணவு வசதி.

(6) தங்குமிட வசதி - உள்ளே தங்கும் வான்படை வீரர்/வீராங்கனைக்கு இலவசம்.

(7) பிரயாணம் - ஆண்டொன்றுக்கு மூன்று சோடி விடுமுறை புகையிரத பயணச்சீட்டுகள் (வான்படை வீரர்/வீராங்கனைக்கும் மனைவிக்கும்/கணவருக்கும் பிள்ளைகளுக்கும்). உள்ளே தங்கியிருக்கும் வான்படை வீரர்/வீராங்கனைக்கு மாதமொரு தடவை சொந்த இருப்பிடம் போய்வருவதற்கு மேலதிகமாக ஒரு சோடி புகையிரதப் பிரயாணப் பத்திரம் அல்லது பஸ் வண்டிக் கட்டணம் செலவின மீளளிப்பு.

(8) கலவரகாலப்படி - நிரந்தரமான நிலையங்களுக்கு வெளியே கடமைக்குச் செல்லும்போது இக் கொடுப்பவு வழங்கப்படும் (விவாகமானவர், விவாகமாகாதவர் என்பதற்கிணங்க கொடுப்பனவு வேறுபடும்).

(9) நன்னடத்தைப் பதக்கம் சம்பளம் - மிக உயர்ந்த தரத்திலான நடத்தையும் பொது ஒழுக்கமும் கொண்ட ஆளணியினருக்கு மாதமொன்றுக்கு ரூபா 30 இருந்து ரூபா 204 வரை வழங்கப்படும்.

(10) சீருடைக் கொடுப்பனவு மாதமொன்றுக்கு ரூபா 170 வழங்கப்படும்.

(11) மருத்துவம் - வான்படையின் செலவில் வான்படை வீரர்/வீராங்கனைக்கும் திருமணமாயின் அவர்களது குடும்பங்களுக்கும் இலவச மருத்துவ வசதிகள் செய்யப்படும்.

(12) வெளியில் தங்கியிருப்பவர்களும் வேலைத்தலத்திலிருந்து 30 மைல் (கி. மீ. 48) சுற்றுவட்டத்தில் வாழ்பவர்களுமான வான்படை வீரர்/வீராங்கனைக்கு இ. போ. ச. பேரூந்து வண்டிகளில் வேலைக்கென இலவசமாக பிரயாணச் சீட்டு வழங்கப்படும்.

(13) விவாகமான வான்படை வீரர்/வீராங்கனைக்கு அரசாங்கத்திற்குரிய விவாகமானவர்களுக்கான விடுதியில் குடியிராவிடில் மாதமென்றுக்கு ரூபா 1,200 இருந்து 3,300 வரை வாடகைப்படியொன்றுக்கு உரித்துடையவராவர்.

(14) வேறு கொடுப்பனவுகள் - (பிரிந்திருத்தல் அல்லது வெளிநாடுகளில் சேவையாற்றுதல்) இலங்கை வான்படை சம்பள சட்டதிட்டங்களுக்கு அமைய இக்கொடுப்பனவு வழங்கப்படும்.

7. **விண்ணப்பதாரர்களுக்கான அறிவுறுத்தல்கள்.**- (அ) விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட படிவத்தின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப்பட வேண்டும். எல்லாக் கூடுகளும் கூடியவரை விரிவான விவரங்களுடன் தமது கையெழுத்தினால் தெளிவாக நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் 2006 நவெம்பர் மாதம் 24 ஆந் திகதி நண்பகல் 1200 மணிக்கு முன் "தலைவர், ஆள்திரட்டற் சபை, இலங்கை வான்படை, ஏக்கல, கொட்டுகொட" என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். (பதிவுத் தபாலில் அனுப்பாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா). விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "தொண்டர் வான்படையில் தொண்டர் வான்படை வீரர்/வீராங்கனைக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடுதல் வேண்டும். முடிவு தேதியின் பின்னர் கொட்டுகொட, ஏக்கல, இலங்கை வான்படையை வந்தடைவனவும், இந்த அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அமையாதவையுமான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

(ஆ) அரசாங்க சேவையில்/கூட்டுத்தாபனத்தில்/சபையில்/குடியியல் தாபனத்தில் உள்ள விண்ணப்பக்காரர்களது விண்ணப்பம் தத்தம் திணைக்களத்தின்/சபையின்/குடியியல் தாபனத்தின் தலைமையதிகாரிகள் ஊடாகவே அனுப்புதல் வேண்டும். இந்த விண்ணப்பங்கள், விண்ணப்பகாரர் தெரிவுசெய்யப்படின் விடுவிக்கப்படுவர் என்ற சான்றிதழொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பக்காரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும்போது பின்வரும் ஆவணங்களின் மூலப் பிரதிகளைச் சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்தப்படுவர் :-

(1) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் மூலப்பிரதி (கல்விச் சட்டக்கோவையின் நோக்கத்திற்காக வழங்கப்பட்ட சான்றிதழ்கள் அல்லது பிறப்புச் சான்றிதழின் பிரித்தெடுப்பு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(2) தேவைப்படுத்தப்பட்ட கல்வித் தகைமைக்கு ஆதாரமான சான்றிதழ்.

(3) தமது தொழிற்துறை/தொழில்நுட்பப்பயிற்சி அல்லது அனுபவம் ஏதுமிருப்பின் அது தொடர்பான சான்றிதழ் முன்வைத்தல் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

(4) அண்மையில் பெற்ற இரண்டு நற்குணச் சான்றிதழ்களைப் பெற்றிருத்தல் வேண்டும். இவை விண்ணப்பக்காரரைத் தனிப்பட்ட முறையில் நன்கறிந்த பொறுப்புவாய்ந்த இருவரிடம் இருந்து அல்லது விண்ணப்பகாரரின் தொழில் தருநரிடமிருந்து (தொழில் புரிவாராயின்) பெற்றிருத்தல் வேண்டும்.

(5) விளையாட்டுத்துறை அல்லது கெடெற்றிங் முதலியவற்றிற்கு ஆதாரமான சான்றிதழ்கள்.

(ஈ) ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு கோரப்படும்போது அவற்றைச் சமர்ப்பிக்கத்தவறும் விண்ணப்பகாரர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(உ) ஆவணங்களோ ஆவணங்களின் பிரதிகளோ விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்படுதலாகாது.

(ஊ) விண்ணப்பப்படிவத்துடன் சேர்த்துச் சான்றிதழ்களின் எவையேனும் மூலப்பிரதிகள் அனுப்பப்படின் அவை காணாமற் போனவைக்கு வான்படை பொறுப்பல்ல.

8. நேர்முகப் பரீட்சைக்குத் தகுந்தவரெனக் கருதப்படும் விண்ணப்பக்காரர்கள் விமானப்படை ஆள்திரட்டற் சபையொன்றின் முன்னிலையில் தங்கள் சொந்தச் செலவில் நேர்முகப் பரீட்சையொன்றுக்குத் தோற்றுதல் வேண்டும். நேர்முகப் பரீட்சைகள் இலங்கை வான்படை ஏக்கலை நிலையத்தில் நடைபெறும்.

9. விண்ணப்பதாரியொருவர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தேசிய அடையாள அட்டை சமர்ப்பித்தல் வேண்டும். தேசிய அடையாள அட்டை வைத்திராத விண்ணப்பக்காரர்கள் வேறு ஏதேனும் விதமான ஏற்றுக்கொள்ளத்தக்க அடையாளமொன்றைச் சமர்ப்பிக்கலாம். ஆயினும் எந்தவொரு விண்ணப்பக்காரரும் தேசிய அடையாள அட்டையின்றி சேர்த்துக்கொள்ளப்படமாட்டார்.

10. தங்கள் இறுதி நேர்முகப் பரீட்சைகளையடுத்து பொருத்தமானவர்களாக இருக்கக்கூடிய விண்ணப்பக்காரர்கள் வான்படை மருத்துவச் சபையொன்றின் முன்னிலையில் தோற்றுமாறு தேவைப்படுத்தப்படுவர். பொருத்தமான விண்ணப்பக்காரர்கள் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் வரிசைப்படுத்தப்பட்டு வான்படையின் தொழிற் தேவைப்பாடுகளின் அடிப்படையில் உயர் புள்ளி மட்டத்தில் இருந்தே தேர்வு செய்யப்படுவர்.

11. விண்ணப்பக்காரொருவருக்கு விதப்புரை வழங்க விரும்பும் எவரும் நற்சாட்சிப்பத்திரமொன்றை வழங்குவதன் மூலம் அவ்வாறு செய்தல் வேண்டும். ஏதேனும் விதத்தில் ஆதரவு தேடுதல் அல்லது விண்ணப்பக்காரரொருவரின் தெரிவுக்கு செல்வாக்கைப் பயன்படுத்த எத்தணித்தல் அத்தகைய விண்ணப்பக்காரரைத் தகைமையிழக்கச் செய்யும்.

12. விண்ணப்பத்தில் பிழையான தகவல் காணப்படும் ஏதேனும் கூற்று அத்தகைய பிழை தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின் தகைமையிழப்பிற்கும் தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்படின் பதவிநீக்கத்திற்கும் விண்ணப்பகாரரை ஆளாக்கிவிடும்.

13. நேர்முகப் பரீட்சைகளில் சித்திபெறாத விண்ணப்பக்காரர்களுக்கு அதுபற்றி அறிவிக்கப்படமாட்டாது.

டப் டி ஆர் எம் ஜே குனதிலக,
எயார் மாஷல்,
வான்படைத் தளபதி.

தலைமையலுவலகம்,
இலங்கை வான்படை,
த. பெ. 594,
கொழும்பு.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை விமானப்படை**

*தொண்டர் வான்படை வீரர்/வீராங்கனைகளுக்கான வெற்றிடங்கள்*

1. முழுப் பெயர் :-----.
(தேசிய அடையாள அட்டைப்படி)

2. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----.

3. அஞ்சல் முகவரி :-----.

4. தபால் முகவரி :-----.

5. நிரந்தர முகவரி :-----.

6. நிரந்தர முகவரியின் பொலிஸ் நிலையம் :-----.

7. மாவட்டம் :-----.

8. தேர்தற் தொகுதி :-----.

9. கிராம உத்தியோகத்தர் பிரிவு :-----.

10. தொலைபேசி இலக்கம் :-----.

11. பிறந்த தேதி :-
ஆண்டு :-----. மாதம் :-----. திகதி :-----.

2006.12.31 ஆந் திகதி அன்றுள்ளவாறு வயது :-

வருடங்கள் :-----. மாதங்கள் :-----. நாட்கள் :-----.

12. விவாகமானவரா/விவாகமாகாதவரா :-----.

13. பால் :-----.

14. உயரம் :- அடி :-----. அங்குலம் :-----.

15. க. பொ. த. (சா. த.) பரீட்சை :-

| ஆண்டு | மாதம் | சுட்டிலக்கம் | சித்தியடைந்த பாடங்கள் | பெற்ற தரங்கள் |
|---|---|---|---|---|
| | | | | |

16. க. பொ. த. (உ. த.) பரீட்சை :-

| ஆண்டு | மாதம் | சுட்டிலக்கம் | சித்தியடைந்த பாடங்கள் | பெற்ற தரங்கள் |
|---|---|---|---|---|
| | | | | |

17. (அ) தொழில் துறை சம்பந்தமான விஷேட தகைமைகள் (உதாரணம் - பெற்ற தொழினுட்ப பயிற்சிகள்) :-----.

(ஆ) தொழில்துறை அனுபவம் :-

| அனுபவம் | சேவை செய்த காலம் | சேவை செய்த நிலையத்தின் தலைவருடைய பெயரும் முகவரியும் |
|---|---|---|
| | | |

18. விளையாட்டுத் துறையில் விசேட சாதனைகள் பற்றிய விபரம் :-----.

19. பாடசாலையில் அல்லது வெளி ஒழுங்கமைப்புகளில் குறிப்பிடத்தக்க வேறு சாதனைகள் :-----.

20. ஆயுதப்படைகளுக்கு அல்லது பொலிஸ் சேவைக்கு இதற்கு முன்னர் விண்ணப்பித்திருந்தால் விவரங்கள் தரவும் :-----.

21. நீர் குடியியல் அல்லது இராணுவ நீதிமன்றமொன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளீரா ? :-----.

*22.* நற்சாட்சிப்பத்திரங்கள் வழங்குபவர் பற்றிய விபரங்கள் :-

| *பெயர்* | *பதவி* | *நிரந்தர முகவரி* |
|---|---|---|
| | | |

*23.* **விண்ணப்பக்காரரால் கையொப்பமிடவேண்டிய வெளிப்படுத்துகை :**

மேலேயுள்ள வினாக்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள விடைகள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் சரியானவை என என்மீது ஆணையாக வெளிப்படுத்துகிறேன். இலங்கைக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை நிரந்தர வான்படையில் வான்படை வீரராகத் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பக்காரர்கள் தொடர்பில் கடைப்பிடிக்கப்படும் நடவடிக்கை முறையையும் அவற்றுக்குரிய விதிகளையும் நான் வாசித்து விளங்கிக்கொண்டுள்ளேன்.

....................................................
விண்ணப்பக்காரரின் கையொப்பம்.

*திகதி :-----.*

*11-233*